www.tamilarangam.net

# மாணவ மணிகளே !
# மறத்தமிழ் வேங்கைகளே !
# வாருங்கள் - நியாயம் கேளுங்கள் !

---

**இதோ வருகிறுன் !**
**இலங்கையின் இட்லர் வருகிறுன்!**

அவன் யார் தெரியுமா ?

**சிங்கள இனவெறியர்களின் சேனைத்தலைவன்**
**கதறக் கதறத் தமிழ்த் தாய்மார்களின்**
**கற்பைச் சூறையாடச் செய்துவிட்டுத்**
**துடிக்கத் துடிக்கத் தமிழ் இளைஞர்களை**
**வேட்டையாட ஆணை பிறப்பித்துவிட்டு**

நாடற்று — நாதியற்று
போக்கிடம் இன்றி — புகலி மின்றி
அழுத கண்ணீரும் — தொழுத கையுமாய் இருக்கும்
மலையகத் தமிழர்களில் பல இலட்சம் பேரை
அநாதைகளாய் — அகதிகளாய்
இந்தியத் தமிழகத்திற்கு அனுப்பிக் கருவறுக்கத் திட்டம் தீட்டிவிட்டு

**வருகிறுன் வருகிறுன் செயவர்த்தனே !**

கொள்கை வீரர் குட்டிமணி — ஜெகன்
ஆகிய மான மறவர்களுக்கு

**மரணதண்டனை விதித்துவிட்டுச் செயவர்த்தனே வருகிறுன்!**

தூக்குக் கயிற்றை முத்தமிடச் சிரித்த முகத்தோடு நிற்கும்
அந்தச் சிங்க மறவர்களை,
நினைத்தால் நெஞ்சு பதைக்கும் !
சொன்னல் வாய் பதைக்கும் !
வரலாறு காணுத கொடுமைகளைச் செய்ய இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டு

விடுதலைப் போராளிகட்குப் பரிவு காட்டினர்
பாதிரியார் என்பதற்காகச்
சிங்கராயரை, சின்னராசுவை, அருமை மாணவமணி மயில்வாகனனை
இராணுவ முகாமில் காவலில் வைத்துக் கொடுமைப்படுத்திவிட்டுச்
செந்தமிழ்க் காளையரைக் கண்ட இடத்தில் வேட்டையாடி நரமாமிசம்
தின்னிச் சிங்கள ஓநாய்களை வாழ்த்தி வழி அனுப்பி வைத்துவிட்டு

**வருகிறுன் ! வருகிறுன் !! செயவர்த்தனே வருகிறுன் !!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரத்தம் தோய்ந்த வாயோடு தசை தொங்கும் பற்களோடு
கபாலம் ஏந்திய கரங்களோடு கற்பைக் கீறிய நகங்களோடு
தமிழினத்தையே அழித்திடும் தலைக்கனத்தோடு, தைரியத்தோடு

## கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில்

கலந்துகொள்ள ஒரு கொடியவன் — கொலைக்கஞ்சா வெறியர்களின் கோமான்

# செயவர்த்தனே

## இந்தியாவுக்கு வருகிறான் !
## அப்படியே தமிழகத்துக்கும் வருகிறான் !

அவன் புரியும் கொடுமைகளைக் கண்டும்
நாம் குறட்டைவிட்டுத் தூக்கம் கலையாத
உறக்கத்தைக் கண்டுகளிக்க வருகிறான்!
நம் ஏமாளித்தனங் கண்டு
எள்ளிச் சிரிக்க வருகிறான் !

## தூங்கியது போதும்
## ஏ ! தாழ்ந்த தமிழகமே !

துடித்தெழு ! என்று தட்டியெழுப்பும் தானை மறவர்களே!
தமிழ் இளைஞர்களே !!
மாணவ மணிகளே ! மறத்தமிழ்ப் புலிகளே !!
'பொங்கு தமிழருக்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு'
என்று சிந்துபாடி
சித்தம் துடிக்க, இரத்தம் கொதிக்கச்

## சென்னையில் 7-3-83-ல்
## பேரணி

நடத்துவோம் வாரீர் !
கலவரம் ஒருதுளியும் தலைகாட்டாது
ஓர் இராணுவக் கட்டுப்பாட்டோடு
மாணவர்கள் நாம் எல்லோரும்
ஓரணி நின்று நடத்தும் பேரணி இது!

## 'கொடியவனே' திரும்பிப்போ !
## கொலைகாரனே திரும்பிப்போ !
## என்ற முழக்கங்கள்
## இங்கிருந்து சிங்கள ஓநாய்களின்
## செவிப்பறையைக் கிழிக்கட்டும் !

# வரவேற்கக் காத்திருக்கும்
# டில்லிக்கும் கேட்கட்டும் !

# நாம் 'யார்' என வையம் காணட்டும் !

## வாருங்கள் - நியாயம் - கேளுங்கள்!

இவ்வண்ணம்
**தமிழ்நாடு மாணவர் பேரவை**